செ.வெ.எண் -39 நாள்: 25.06.2018

## அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(25.06.2018)** நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள், திருமண நிதியுதவித் திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **287** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் தன்விருப்ப நிதியிலிருந்து 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.8487/- வீதம் ரூ.25,461/- மதிப்பில் மூன்று சக்கர வண்டிகளையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.30,200/- வீதம் ரூ.60,400/- மதிப்பில் நவீன செயற்கை அவியங்களையும், 6 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.16,350/- வீதம் ரூ.98,100/- மதிப்பில் நவீன செயற்கை அவியங்களையும், மாவட்ட வருவாய்த்துறையின் சார்பில் 5 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இணையதள வசதியுடன் கூடிய சிம்கார்டுகளையும் என ஆகமொத்தம் **16 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 83 ஆயிரத்து 961** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிதாபானு, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) அ.பூங்கோதை மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**